DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No.43/2025
P.W.9

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செல்வம் |
| Husband's/ Father's Name | : | திரு.துரை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 27 |

(Accused 1 to 10 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of June 2026.

**முதல் விசாரணை**

நான் துவரங்குறிச்சி பில்லுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பன்னாங்கொம்பில் உள்ள ஐயங்கார் பேக்கரியில் டீ மாஸ்டராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 அஜித்குமாரை எனக்கு தெரியாது. அ.சா.2 பூவரசனை தெரியாது. எதிரிகளை தெரியாது. சம்பவம் பற்றி தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சாட்சியின் முந்தைய வாக்குமூலத்தை பரிசீலத்து பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 157-ன் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீசார் விசாரணையின்போது கடந்த 06.09.2024ம் தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் நான் எனது கடையில் இருக்கும் போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஆமணக்கம்பட்டியில் வசிக்கும் பொன்னுச்சாமி மகன் அஜித்குமார் என்பவரும் பூவரசன் என்பவரும்

Approved

எனது கடைக்கு அருகில் உள்ள ஐயங்கார் பேக்கரிக்கு வந்து டீ குடித்துவிட்டு அஜித் குமார் அவரது இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்து இருந்தபோது எதிரிகள் அனைவரும் அங்கு வந்து அஜித்குமாரை முறைத்துப் பார்த்தார்கள் என்றும் அஜித்குமார் அவர்களிடம் ஏன் முறைத்து பார்க்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவரைப் பார்த்து நீ சாதாரண தப்படிக்கும் பற பையன் எங்களைப் பார்த்து முறைப்பாயா என்றும் வண்டியில் உட்கார்ந்து கொண்டு பேசுவாயா என்றும் சொல்லி அவரது சாதி பெயரை சொல்லி கெட்ட வார்த்தையால் திட்டி அவரது தலை முடியை பிடித்து கீழே தள்ளிவிட்டு கையால் உடம்பில் அடித்து வலைவெறி தாக்குதல் நடத்தினார்கள் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் அனைவரும் நான் சார்ந்துள்ள ஊராளி கவுண்டர் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

Adobe